www.Padasalai.Net www.TrbTnpsc.com

Kanchipuram Dt

# இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2025

## பதினொன்றாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி | வணிகவியல் | மதிப்பெண்கள்:90

### பகுதி – அ

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: 20x1=20

1. கணக்கீட்டு ஆண்டு என்பது
அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை ஆ) மார்ச் 1 முதல் பிப்ரவரி 28 வரை
இ) ஜீலை 1 முதல் ஜீன் 30 வரை ஈ) ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை
2. ஒப்பந்த மீறலுக்குக் கொடுக்கப்பட்ட இழப்பீடு
அ) சேதம் ஆ) ஊதியம் இ) பணம் ஈ) காசோலை
3. ஒரு அரசாங்க நிறுவனம் எவர் பெயரில் பங்குகளை வாங்குகிறது ?
அ) பிரதமர் ஆ) குடியரசுத் தலைவர் இ) இந்திய தலைமை நீதிபதி ஈ) மாநில முதலமைச்சர்
4. ________ வங்கியில் இருந்து நிதியுதவி பெறுவதற்காக இணைப்பாக வழங்கப்பட்டது.
அ) துறைமுக சான்றாணை ஆ) பண்டகக் காப்பாளர் இரசீது
இ) துறைமுக இரசீது ஈ) பண்டக சான்றாணை
5. செலுத்தல் சம நிலை உள்ளடக்கியது
அ) நடப்பு கணக்கு ஆ) முதல் கணக்கு
இ) பெறுதல் செலுத்தல் கணக்கு ஈ) நடப்பு கணக்கு மற்றும் முதல் கணக்கு
6. நிறுவனங்களுக்கு தேவைப்படும் நேரத்தில் பணத்தை ஒதுக்கீடு செய்தல் கீழ்கண்டவாறு வரையறுக்கப்படுகிறது ?
அ) நிதி மேலாண்மை ஆ) வங்கி இ) பணி மேலாண்மை ஈ) இவற்றில் ஏதுமில்லை
7. மருத்துவர் தொழில் என்பது
அ) வேலைவாய்ப்பு ஆ) தொழில் இ) சிறப்புத் தொழில் ஈ) தனியார் வணிகம்
8. இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, ________ ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.
அ) 1936 ஆ) 1935 இ) 1934 ஈ) 1933
9. எந்த வகையான பொறுப்புணர்வு சமுதாயத்திற்கு நன்மை தரத்தக்கதாக உள்ளது.
அ) சட்டம் ஆ) நெறிமுறை இ) ஒழுங்குணர்வு ஈ) பொருளாதாரம்
10. அயல்நாட்டு பத்திர வெளியீட்டு உரிமை தரும் ஆவணம்.
அ) உரிமை சான்றிதழ் ஆ) வைப்பு இரசீது இ) உரிமை இரசீது ஈ) மாற்றுப் பத்திரம்
11. ________ ஒரு சரக்கேற்றி மூலம் பொருட்களைப் பெற்றுக் கொள்வதை ஏற்றுக் கொள்வதற்கான ஆவணம்.
அ) வழிச் சீட்டு ஆ) சரக்குக் குறிப்பு இ) கப்பல் வாடகை ஒப்பாவணம் ஈ) ஒப்பந்த இரசீது
12. பெயர்ச்சியியலின் முக்கிய நன்மை
அ) உற்பத்தி மேம்பாடு ஆ) செலவுகளை குறைத்தல் இ) இலாபம் ஈட்டுதல் ஈ) பண்டகக் காப்பு
13. கீழ்கண்டவற்றில் எது நாடாளுமன்ற அல்லது மாநில சட்டமன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது ?
அ) பட்டய (சாசன) நிறுமம் ஆ) அயல் நாட்டு நிறுமம் இ) அரசு நிறுமம் ஈ) சட்டமுறை நிறுமம்
14. மொத்த வியாபாரியையும் நுகர்போரையும் இணைக்கும் இணைப்புச் சங்கிலியாகச் செயல்படும் வணிக இடைநிலையர் ________ ஆவார்.
அ) உற்பத்தியாளர் ஆ) தரகர் இ) சில்லறை வியாபாரி ஈ) வாடிக்கையாளர்
15. உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்ட நாள்
அ) 1.1.1996 ஆ) 1.1.1997 இ) 1.1.1995 ஈ) 1.1.1994
16. இந்து கூட்டுக் குடும்பத் தொழிலில் உறுப்பினர்களை எவ்வாறு அழைப்பாய் ?
அ) கர்த்தா ஆ) கூட்டு வாரிசுதாரர் இ) தலைமுறை ஈ) கூட்டாளிகள்
17. ரூபாய் நோட்டுக்களை வெளியிடுவதற்கு எந்த வங்கிக்கு அதிகாரம் உள்ளது.
அ) மைய வங்கி ஆ) வணிக வங்கி
இ) கூட்டுறவு வங்கிகள் ஈ) வெளி நாட்டு வங்கிகள்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



18. நிரந்தர இடமின்றி வெவ்வேறு இடங்களுக்கு சென்று குறைந்த விலையுள்ள பொருட்களை வியாபாரம் செய்வோரை ________ என்பர்.
அ) மடங்கு கடைகள் ஆ) முகவர்கள் இ) தெருக்கடை வியாபாரிகள் ஈ) சுற்றாடும் வியாபாரிகள்
19. கோகோ கோலா நிறுவனத்தை எதற்கு உதாரணமாய் கூறலாம்?
அ) பன்னாட்டு நிறுமம் ஆ) அரசு நிறுமம் இ) இணை நிறுமம் ஈ) பொதுத் துறை நிறுமம்
20. செல்லத்தக்க நிறைவேற்றும் ஒப்பந்த நபர்கள் தங்களுடைய கடமையை செய்வது, அந்த ஒப்பந்தம்
அ) ஒப்பந்த நிறைவேற்றம் ஆ) நடைமுறைப் படுத்தப்படும் இ) செல்லாதது ஈ) இவை எதுவும் இல்லை

## பகுதி – ஆ

**II எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 கட்டாய வினா. 7x2=14**

21. வருமான வரி என்றால் என்ன?
22. தரகர் என்பவர் யார்?
23. மருத்துவக் காப்பீடு என்றால் என்ன?
24. வேலை என்றால் என்ன?
25. மறு ஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?
26. பெயர்ச்சியியல் என்றால் என்ன?
27. தமிழ்நாட்டில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளைப் பட்டியலிடுக.
28. துறைவாரி அமைப்புகளுக்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடு.
29. தானியங்கி பணம் வழங்கும் அட்டை (ATM) பற்றி நீவிர் அறிவது யாது?
30. நிறைவேற்றம் இயலாது போதலின் வகைகள் யாவை?

## பகுதி – இ

**III எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 கட்டாய வினா. 7x3=21**

31. கால அளவின் அடிப்படையில் தொழில் நிதியின் வகைகளை குறிப்பிடுக.
32. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் யாவை? (ஏதேனும் 3)
33. மருவூர்ப்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் – விளக்குக.
34. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் 3)
35. சமூக பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக. (ஏதேனும் 3)
36. சரக்காணையின் உள்ளடங்கள் யாவை? (ஏதேனும் 3)
37. பண்டக காப்பாளர் இரசீது – பண்டக சான்றாணை வேறுபடுத்துக. (ஏதேனும் 3)
38. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
39. செல்லாத ஒப்பந்தம் என்றால் என்ன?
40. சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை? (ஏதேனும் 3)

## பகுதி – ஈ

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35**

41. அ) கூட்டுறவு சங்கத்தின் நன்மைகள் யாவை? (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) சுய உதவிக் குழுக்களின் நோக்கங்களை விவரி. (ஏதேனும் 5)
42. அ) சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக. *(அல்லது)*
ஆ) பல்வேறு வகையான வங்கிகளைச் செயல்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்தி, உதாரணம் தருக.
43. அ) வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) கப்பல் இரசீதிற்கும் கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.
44. அ) போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரி. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) பன்னாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரி.
45. அ) அரசு நிறுமங்களின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)
46. அ) பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிகளை குறிப்பிடுக. (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது? (ஏதேனும் 5)
47. அ) துறைவாரி பண்டக சாலையின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் 5) *(அல்லது)*
ஆ) உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)

***/***

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com